
Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 21, 2023

வியாழக்கிழமை டிசெம்பர் 21, 2023 | ஒளி: 09 கதிர்: 154 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## CEB ஊழியர்களுக்கு நான்கு 'ஷொக்'

இலங்கை மின்சார சபையில் எந்தவோர் ஊழிய ர்களுக்கும் (CEB) 2023ஆம் ஆண்டிற்கான எந்தவொரு ஊக்க ஊதியம் (போனஸ்), கொடுப்பனவுகள் அல்லது முந்திய வருடத்தி ற்கான செலுத்தப்படாத வருடாந்திர ஊக்க ஊதியம் (போனஸ்) மற்றும் பிற ஊக்கத்தொகைகள் எவையும் வழங்கப்படக்கூடாது என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சார சபை உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# "பரேட் சட்டத்தை நிறுத்துங்கள்"



- இதன் காரணமாக பணவீக்கம், வேலையில்லா திண்டாட்டம், மூளைசாலிகளின் வெளியேற்றம் போன்றவை அதிகரிப்பதுடன் அரசாங்க வரி வருமானமும் அதிகரிக்கும்
- நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்குத் தனியான கவனிப்பு வழங்கப்படுவது தொடர்பில் அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்வது குறித்து கவனம் செலுத்தி, உடனடி தீர்வை எடுக்க வேண்டும்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்று மற்றும் வங்குரோத்து நிலை ஆகிய 03 பேரழிவுகளை எதிர்கொண்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையினரின் சொத்துக்கள், வளங்கள் நீதிமன்ற தலையீடு இன்றி பரேட் சட்டத்தின் (Parate execution) மூலம் உடனடியாக ஏலத்திற்கு விடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதனால் தொழிலதிபர்கள் அழுத்தத்திற்கும் நிர்க்கதி நிலைக்கும் இரண்டுங்கெட்டான் நிலைக்கும் ஆளாகியுள்ளனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இச்சூழ்நிலையில் தொழில் துறையானது பொருளாதார மற்றும் சமூக ரீதியாக மிகவும் வீழ்ச்சி நிலையை எட்டியுள்ளதாகவும், இதனால் சொத்து ஏலம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# வெள்ளி வரை அவகாசம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளில் திருத்தம் செய்வதற்கான கால அவகாசம் டிசெம்பர் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர இதனை தெரிவித்துள்ளார்.

பெயர், விண்ணப்பித்த பாடங்கள், மொழி மூலம், பிறந்த திகதி உள்ளிட்டவற்றில் தவறுகள் இருந்தால் இதன்போது திருத்திக்கொள்ள முடியும்.

https://onlineexams.gov.lk/onlineapps/ என்ற இணையதளம் ஊடாக திருத்தங்களைச் செய்து கொள்ள முடியும் என ஆணையாளர் கூறியுள்ளார்.

# பள்ளிவாசல் ஊழியரை கொன்றவர் சிக்கினார்

### சிறை விட்டோடியென தகவல்



பாறுக் ஷிஹான்

ஹட்டன் ஜும்மா பள்ளிவாசல் பாதுகாப்பு ஊழியரைக் கொலை செய்து அங்கு கொள்ளையடித்து தப்பி சென்ற சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# அவதானமாக இருக்குமாறு WHO அறிவுறுத்தல்




இந்தியாவின் கேரள மாநிலத்தில் முதன்முறையாக கண்டறியப்பட்ட 'JN1' எனப்படும் கொரோனா வைரஸின் புதிய திரிபு குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது, 'JN1' வைரஸ் பரவி வருவதால், கேரள மாநிலம் மட்டுமின்றி, சிங்கப்பூரிலும் 'கொவிட் 19' தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

'JN1' என்பது 'கொவிட் 19 ஒமிக்ரான்' வைரஸின் 'BA2.86' துணை வகையை மாற்றுவதன் மூலம் உருவாக்கப்பட்ட மிக வேகமாக பரவும் வைரஸ் வகையாகும்.

குறித்த வைரஸ் திரிபால் 'பயப்படுவது அவசியமற்றது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வைரஸின் தாக்கம் குறித்து மிக அவதானத்துடன் கவனம் செலுத்துவதுவதோடு முகக்கவசம் அணிவது,

தொடர்ச்சி P2

## மின்கட்டணத் திருத்தத்தில்
# 'வற்' தாக்கம் செலுத்தாது



ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படவுள்ள மின் கட்டணத் திருத்தத்தில் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க முடியும் எனவும், மின் கட்டணத் திருத்தத்தில் பெறுமதி சேர் வரி (வற்) எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


மேலும் அவர், "மின் கட்டணத்தை ஜனவரியில் திருத்தம் செய்ய எதிர்பார்க்கப் படுகிறது.

தொடர்ச்சி P2

# 1500 வைத்தியர்கள் பறந்து விட்டனர்

கடந்த வருடம் முதல் இதுவரையான காலப்பகுதியில் விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட 1500இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் 5000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் எதிர்பார்ப்பில் காத்திருப்பதாகவும், 40 சிறிய வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.



# யாழில் டெங்கு தலைவிரித்தாடுகிறது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் மிக உச்சநிலையை அடைந்துள்ளது. டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 111 டெங்கு நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலும் செவ்வாய்க்கிழமை (19) மட்டும் அனுமதிக்கப்பட்டிரு ப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் 18ம் திகதி வரை 886 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்ப ட்டுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பூச்சியியல் ஆய்வுக்குழுவினர் யாழ்.

தொடர்ச்சி P2



# ஹலி-எலயில் மண்சரிவு 10 குடும்பங்கள் இடம்பெயர்வு

பதுளை, ஹலி-எல ஸ்பிரின்வெளிவத்த 5 பிரிவில் புதன்கிழமை (20) ஏற்பட்ட மண்சரிவு காரணமாக அப்பகுதியில் வசிக்கும் 10 குடும்பங்கள் பாதுகாப்பு முறையில் வெளியேற்றப்பட்டுள்ளதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு அடியிலிருக்கும் ஓரங்கள் மண்சரிவினால் இடிந்து காணப்படுவதால் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அந்த இடத்தை ஆய்வு செய்ய உள்ளதாகவும், அந்த நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# பெண்களே! உஷார்




பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள், ஒடுக்குமுறைகள் தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

ஜனவரி 1ஆம் திகதி முதல் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் குறித்த அவசர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் செவ்வாய்க்கிழமை (19) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கையர்களை மீட்பதற்கான
# பேச்சுக்கு மியன்மார் இணக்கம்

மியன்மாரில் பயங்கரவாதிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் 56 பேரை மீட்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அந்நாட்டு உள்துறை அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளதை மியன்மாருக்கான இலங்கை தூதுவர் உறுதி செய்துள்ளார்.

மியன்மாரின் தாய்லாந்து எல்லைக்கு அருகே பயங்கரவாத குழுவொன்றின் சைபர் அடிமைகளாக இலங்கை இளைஞர்கள் சிலர் பலவந்தமாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகின.

குறித்த பிரதேசம் கூகுள் வரைபடத்தில் "Cyber Criminal Area" எனப்படும் சைபர் குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மியன்மாரின் மியாவெட்டி (Myawaddy) நகரில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த பகுதி முழுமையாகப் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் காணப்படுகிறது.

தாய்லாந்தில் கணினித் துறையில் தொழில்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையின் இளைஞர், யுவதிகள் சிலரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# 18 ஆயிரம் போதை வில்லைகள் சிக்கின




எஸ்.றொசேரியன் லெம்பேட்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போதை வில்லைகளுடன் இருவர் புதன்கிழமை (20) மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “பரேட் சட்டத்தை நிறுத்துங்கள்”



பரேட் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கருத்தொன்றை தெரிவித்தே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச புதன்கிழமை (20) இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும் என்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறையினர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றனர் என்றும் இந்தத் தொழில்கள் வீழ்ச்சியடைந்தால், பொருளாதாரம் விருத்தியடையாது சுருங்கும் என்றும் இதன் காரணமாகப் பணவீக்கம், வேலையில்லா திண்டாட்டம், மூளைசாலிகளின் வெளியேற்றம் போன்றவை அதிகரிப்பதுடன் அரசாங்க வரி வருமானமும் அதிகரிக்கும் என்றார்.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும் என்றும் வங்கியின் ஸ்திரத்தன்மைக்கு தாக்கம் இல்லாத வகையில் இதில் தலையிட்டு வங்கியின் ஸ்திரத்தன்மையைப் பேண பிரத்தியேக நிதியத்தை உருவாக்குவது மற்றும் பரேட் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது ஆகியவற்றில் உடனடி கரிசனை காட்ட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய நிதியத்தை நிறுவ சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்றும் இது தொடர்பில் அந்நிறுவனங்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்திற்கு சார்ப்பான நட்பு வட்டார தொழிலதிபர்கள், அரச வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் பெற்று, கடனை செலுத்தாமல், கடன் ஒப்பந்தங்களில், தங்களுக்குச் சாதகமாகத் திருத்தங்களைச் செய்துள்ளனர் என்றும் இவ்வாறு கடன் பெற்றவர்களுக்கு ஒரு கவனிப்பும், நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்குத் தனியான கவனிப்பும் வழங்கப்படுவது தொடர்பில் அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்வது குறித்து கவனம் செலுத்தி, உடனடி தீர்வை எடுக்க வேண்டும் என்றும் இப்பிரச்சினையில் இருந்து அரசாங்கம் இனிமேலும் தலையிடாதிருக்க முடியாது என்றும் தெரிவித்தார்.



## CEB ஊழியர்களுக்கு நான்கு ‘ஷொக்’

நிர்வாகத்தின் செலவைக் குறைப்பதற்காக முன்னர் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு ஏற்பவே இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

CEB ஊழியர்களுக்கு முன்னர் செலுத்தப்பட்ட ஊக்கத்தொகைகள் மற்றும் கொடுப்பனவுகளும் இதில் அடங்கும். 2015 முதல் ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் வழங்கப்படும் 25% சம்பள உயர்வையும் தொடரக்கூடாது.

மேலும் CEB அதிகாரிகளுக்கு வழங்கப்படும் 21 பல்வேறு கொடுப்பனவுகள் மற்றும் ஊக்கத்தொகைகள் குறித்து தனக்குத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2023இல் செலுத்தப்பட்ட தொகைகள், அவை எவ்வாறு செலுத்தப்படுகின்றன. ஒவ்வொரு CEB அதிகாரிக்கும் ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வாடகையாகச் செலுத்தப்பட்ட தொகைகள் குறித்தும் தனக்கு அறிக்கையளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## பள்ளிவாசல் ஊழியரை கொன்றவர் சிக்கினார்

ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலின் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றிய ஹட்டன் ஹிஜிரபுர பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய சி.எம். இப்ராஹிம் என்பவர் சனிக்கிழமை (09) அதிகாலை தாக்கி கொலை செய்யப்பட்ட நிலையில் பள்ளிவாசலிலிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டிருந்தது.

இச் சம்பவம் தொடர்பிலான சந்தேக நபர் பள்ளிக்குள் வருவது உண்டியலை உடைப்பது போன்ற காட்சிகள் சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளதுடன் கைது செய்வதற்கான விசாரணைகளில் ஹட்டன் பொலிஸார் ஈடுபட்டிருந்த நிலையில் சந்தேக நபரான முகைதீன் பாவா லாபீர் (வயது-45) என்பவர் சம்மாந்துறை பொலிஸாரினால் செவ்வாய்க்கிழமை(19) கைது செய்யப்பட்டுள்ளனர்.


குறித்த சந்தேக நபர் கடந்த 27.01.2022 அன்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்காக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்து 3 மாதங்களுக்கு முன்னர் தப்பி சென்று தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில், ஹட்டன் ஜும்மா பள்ளிவாசல் பாதுகாப்பு ஊழியரை கொலை செய்து அங்கும் கொள்ளையடித்து, தலைமறைவாகி இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த நபருக்கு சாய்ந்தமருது, பொத்துவில் மற்றும் ஹட்டன் பொலிஸ் நிலையங்களில் கொலை, கொள்ளை தொடர்பாக முறைப்பாடுகள் உள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவதானமாக இருக்குமாறு WHO அறிவுறுத்தல்

சுகாதாரப் பழக்கங்களைப் பேணுவதன் மூலமும் இதனைத் தடுக்க முடியும் எனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## யாழில் டெங்கு தலைவிரித்தாடுகிறது

மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் மிக அதிகமான டெங்கு பரவல் இருப்பதாகவும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் பெருகிக் காணப்படுவதாகவும் அடையாளம் கண்டுள்ளனர்.

குறிப்பாக வைத்தியசாலை வளாகங்கள், பாடசாலை வளாகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அரசாங்க அலுவலகங்கள், அரசாங்க விடுதிகள், தனியார் கல்வி நிறுவன வளாகங்கள் போன்றவற்றில் டெங்கு தாக்கத்தை ஏற்படுத்தும் நுளம்புக்குடம்பிகள் பெருமளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## ‘வற்’ தாக்கம் செலுத்தாது

தற்போது அதிகபட்ச திறனில் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. புகைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்துவதால் மின் உற்பத்திக்கு ஏற்படும் அதிக செலவைக் கருத்தில் கொண்டே ஒக்டோபர் மாதத்தில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போது காலநிலை மாறியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக மழை பெய்து வருவதாலும், மழை இன்னும் இரண்டு வாரங்களுக்குத் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாலும், மின் கட்டணத்தைத் திருத்த முடியும் என இலங்கை மின்சார சபை எமக்கு அறிவித்துள்ளது.


அதன்படி, டிசெம்பர் மாதத்தில் உள்ள CEB கையிருப்பைக் கருத்தில் கொண்டு, ஜனவரியில் நடைபெறவுள்ள அடுத்த கட்டணத் திருத்தத்தில் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க முடியும் என நாம் நம்புகிறோம். மேலும், ஜனவரி மாத மின் கட்டண திருத்தத்தில் ஒருபோதும் வற் தாக்கத்தைச் செலுத்தாது” என தெரிவித்தார்.






## பெண்களே! உஷார்

மேலும், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிர்வகிக்கும் வகையில் இந்த அவசர தொலைபேசி இலக்கம் இயங்குவதுடன், இவ்விலக்கத்தின் ஊடாக நாட்டின் எந்த இடத்திலிருந்தும் எந்தவொரு மொழியிலும் பிரச்சினைகளைத் தெரிவிக்க முடியும் என்றும் இந்த அழைப்பு மையத்தின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மிகவும் நம்பகமான மற்றும் தனியுரிமை பாதுகாக்கப்பட்ட வகையில் சேவை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.




முல்லைத்தீவு மாவட்டத்தில்

## கனமழையால் 2,113 குடும்பங்களை சேர்ந்த 6,268 பேர் பாதிப்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,113 குடும்பங்களைச் சேர்ந்த 6,268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை சற்று குறைந்ததை அடுத்து வெள்ள நீர் வழிந்தோடி வருகின்ற நிலைமையில் இடைத்தங்கல் முகாம்களில் இருந்த மக்கள் தங்களுடைய வீடுகளுக்குச் சென்று வீடுகளைத் துப்புரவு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையிலே ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் புளியங்குளம் பண்டாரவன்னி கூழாமுறிப்பு பேராறு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கி இருந்த மக்கள் செவ்வாய்க்கிழமை (19) மாலை முதல் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று வீடுகளைத் துப்புரவு செய்து வீட்டினுள் வசித்து வருகின்றனர்.

இருப்பினும் அவர்களுடைய அத்தியாவசிய தேவைகளான குடிநீர், மலசலக் கூட வசதிகளைப் பாவிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

குடிநீர் கிணறுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளமையினால் நீரைப் பருக முடியாத நிலையிலும் நீர் தேங்கியுள்ள நிலையில் மலசலக் கூடங்களை




பாவிக்க முடியாத நிலைகளும் பல இடங்களில் காணப்படுகிறது

வீடுகளுக்குள் இருந்த பொருட்கள் அனைத்தும் நனைந்து விட்டதாகவும் உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளுக்காக பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் குறிப்பாக மாணவர்களுடைய கற்றல் செயல்பாடுகளுக்குரிய கற்றல் உபகரணங்கள் அனைத்தும் வெள்ளத்தில் நனைந்துள்ளதாகவும் அவ்வாறான பின்னணியில் மாணவர்களுடைய கற்றல் செயல்பாடுகளும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வீட்டிலிருந்த பல பொருட்கள் வெள்ளநீருடன் அடித்துச் செல்லப்பட்டு இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## 18 ஆயிரம் போதை வில்லைகள் சிக்கின

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த இருவரிடமிருந்து 18, ஆயிரம் போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தோட்டவெளி, தாழ்வுபாடு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது .

கைப்பற்றப்பட்ட போதை வில்லைகளின் பெறுமதி 21 இலட்சம் ரூபாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், போதை வில்லைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



காற்றாலையும் கனிய மண் அகழ்வும்

# “இருப்பியலை சீர்குலைக்கும்”

## ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

காற்றாலையும் கனிய மண் அகழ்வும் ஆழமாக துளையிட்டு நிலத்தடியை அதன் இயற்கை தரைத்தோற்ற இருப்பியல் ஒழுங்கமைப்பை சீர்குலைக்கும் வேலையே நடைபெறுகிறது என்று மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை புதன்கிழமை (20) அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதி என்பது சாதாரண தரைத்தோற்றத்தில் இருந்து மிகவும் குறைவான தாழ் நிலப் பிரதேசம் ஆகும். வலிமை குறைந்த கனதியற்ற, நொதியமுள்ள தீவு என்பதால்தான் மூன்று மாடிக்கு மேல் கட்டிடம் அமைப்பதற்கு மன்னார் தீவு பகுதியில் அனுமதி வழங்குவதில்லை. ஐம்பது ஆண்டுகளில் நலிவுறும் தீவுகளில் மன்னாரும் ஒன்றென யுனெஸ்கோ நிறுவனம் ஏலவே முன்னெச்சரிக்கை விடுத்திருந்தது.



அவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை அமைப்பதும் கனிய மண் அகழ்வதும் என்பது மேலும் தீவு பிரதேசத்தை பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும். உலகம் முழுவதும் மனிதர்களின் இயற்கைக்கு எதிரான செயற்பாட்டால் புவி வெப்பமயமாதல் அதிகரிப்பால் காலநிலை மாற்றம் ஏற்படுகிறது.

இதனால் பேரிடர் மூலம் கடல் நீர் மட்டம் உயரலாம். அதனால் பல தீவுகள் காணாமல் போகலாம் என்றும் அறிவியலாளர்களால் எச்சரிக்கப் பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. டுபாய் காலநிலை மாநாட்டில் தாங்களும் பங்கேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நில அதிர்வோ, சுனாமியோ, பெரும் வெள்ளமோ ஏற்பட்டால் தற்காத்துக்கொள்ளக்கூடிய நிலையில், வலிமையிழக்கவைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இங்கு மிக நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு பெரும் வாழ்வியல் கேடாக மாறும். இயற்கையை அழித்து இயல்பை மாற்றி பணம் தேட முயல்வது தற்கொலைக்குச் சமமானது ஆகும். இங்கு வாழும் மக்களைப் பற்றிய எந்த விதமான நோக்கு நிலையும் இல்லாமல் ஆதாயம் தேட நினைப்பது அரசியல் இழுக்காகும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆடைக்குள் ஹெரோய்னை மறைத்த பெண் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம்- வடமராட்சி துன்னாலை கிழக்கு பகுதியில், ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 51 வயதுடைய பெண்ணொருவர் செவ்வாய்க்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது ஆடைக்குள் ஹெரோய்னை மறைத்து வைத்திருந்த நிலையிலேயே, நெல்லியடி பொலிஸாரால் அப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.



அவரிடமிருந்து 06 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணை, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கஞ்சாவுடன் தம்பதி உட்பட மூவர் சிக்கினர்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட தம்பதி உட்பட மூவரை முல்லைத்தீவு பொலிஸார் செவ்வாய்க்கிழமை (19) கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்து, 914 கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த 34 வயதுடைய



ஒருவரையும், 214 கிராம் கஞ்சாவுடன் 25 மற்றும் 26 வயதுடைய கணவன்,மனைவி இருவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்களுக்கான பிரதான வினியோகஸ்தர்களைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.




## வீதி விபத்தில் ஒருவர் பலி

ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி - ஏத்தாளை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் பாலக்குடா- கரடிப்பானி வத்தையைச் சேர்ந்த தெஹிவலகே ஜானக ஏரங்க கொஸ்தா (வயது 37) என்பவர் உயிரிழந்துள்ளார்.

தலவில பகுதியில் இருந்து நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலத்த காயத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதியை அங்கிருந்தவர்களால் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும், அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## சூட்சுமமாக பணம் வசூலித்த 11 பேர் கைது

கொழும்பு- நாரஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் திணைக்களத்துக்கு அருகில் காத்திருக்கும் நபர்களுக்கு பலவிதமான அழுத்தங்களைப் பிரயோகித்து பணம் வசூல் செய்த பெண்ணொருவர் உட்பட 11 பேரை பொரளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொரளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், நாரஹேன்பிட்டி, மனீன் நகரைச் சேர்ந்த போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணம் தேடும் நோக்கில் குறித்த இடத்தில் நின்று கொண்டிருப்பவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## யாழ். பல்கலைக்கழகத்துக்குள்

## அரைக் காற்சட்டையுடன் செல்ல முயன்றவரால் சர்ச்சை

எம்.றொசாந்த்

சர்வதேச திரைப்பட விழாவின் சில திரைப்படங்கள் யாழ். பல்கலைக்கழகத்திலும் திரையிடப்படுகின்றது. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (19) அரைக் காற்சட்டையுடன் வந்த ஒருவரை அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழகத்துக்குள் அனுமதிக்க மறுத்துள்ளனர்.

இதன்போது அரைக் காற்சட்டையுடன் வந்தவருடன் உடனிருந்த சிலர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டு அதனைக் காணொளி எடுத்து அச்சுறுத்தி பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முயன்றுள்ளனர்.

இதன்போது அங்கு வந்த பல்கலைக்கழக பதிவாளரும் அதே நிலைப்பாட்டைத் தெரிவிக்கவே, ஏமாற்றமடைந்த குறித்த குழு பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

குறித்த குழுவினர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்ட காணொளியை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி, “யாழ். பல்கலைக் கழகத்தின் கலாசாரம் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருப்பவர்களின் காற்சட்டையில் தொங்கிக்கொண்டிருப்பது தான் துயரம்" என தெரிவித்து பகிர்ந்துள்ளனர்.

## யாழில் 70 பேர் கைது

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையாளர்கள் என சந்தேகிக்கப்படும் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகமாகக் காணப்படும் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளதாகவும், வைத்திய அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அவர்களை நீதிமன்றங்களில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## போதைப்பொருளுடன் இளைஞன் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - நெல்லியடி பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவர் செவ்வாய்க்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலைக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்து வந்த ஹட்டன் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கமைய குறித்த இளைஞனை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் இளைஞனை முற்படுத்தியபோது, இரண்டு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

## சிறுவர்கள் மத்தியில் ஒருவகை வைரஸ்

ஏ.எம்.ஜலீல்

உக்குவளை, மாத்தளை பிரதேசங்களில் சிறுவர்கள் மத்தியில் ஒருவகை வைரஸ் காய்ச்சலும் அவர்களுள் சிலருக்கு வாயைச் சுற்றி தேமல் போன்ற அடையாளங்கள் ஏற்பட்டு வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சிறுவர்கள் மத்தியில் ஏற்படும் காய்ச்சல் சுமார் ஐந்து முதல் ஏழு நாட்கள் நீடிப்பதாகவும் காய்ச்சலுடன் சிறிது இருமலும் தொண்டை வரட்சியும் காணப்படும் எனத் தெரிவிக்கும் அவர்கள், இது பெரியவர்களிடத்திலும் பரவுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது பெய்து வரும் மழையே இதற்கு காரணமெனவும் இத்தொற்றுக்கு ஆளாகும் சிறார்களை, பொது இடங்களுக்கு அனுப்புவதையும் கூட்டிச் செல்வதையும், தவிர்த்துக்கொள்ளுமாறும், வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுக் கொள்ளுமாறும் மேலும் அறிவுறுத்தியுள்ளனர்.

## மாணவி துஷ்பிரயோகம்; இராணுவ சிப்பாய் கைது

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - நவகத்தேகம , வெம்புவெவ பகுதியை சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவியை கடத்தி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இராணுவ சிப்பாய் ஒருவர் நவகத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருவிட்ட , கெமுனுஹேவா படையணியில் பணியாற்றும் வஹரக, தலழுவெல பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக கூறப்படும் குறித்த மாணவியை மருத்துவ



பரிசோதனைக்காக ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபர் ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

> **பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக மாணவி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதி**

## ஐந்தாண்டு திட்டத்திற்கு அங்கீகாரம்

இலங்கையின் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திட்டம் (2024 - 2029) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் பத்தரமுல்லை செத்சிறிபாயவில் உள்ள அமைச்சர் கேட்போர் கூடத்தில் வைத்து புதன்கிழமை (20) கையளிக்கப்பட்டது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ சட்டத்தின் விதிகளின்படி, கடலோரப் பாதுகாப்பு, கடலோர வள முகாமைத்துவத் திணைக்களமானது கடலோர வளங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கான திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மேலும் மாறிவரும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் திட்டம் புதுப்பிக்கப்பட வேண்டும். கடந்த 2018ஆம் ஆண்டு இந்த நாட்டில் கரையோர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தைப் புதுப்பித்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (2024- 2029) கடலோர வளங்களைப் பாதுகாப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட உள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் அடுத்த ஆண்டு முதல் கரையோர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான ஐந்தாண்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் கரையோரப் பிரதேசத்தில் கிடைக்கும் உயிரியல் மற்றும் பௌதீக வளங்கள் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வகையில் நாடு மிகவும் திறம்படக் கரையோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மரபுகளுக்கு அப்பால் சென்று கடல் வளங்களில் இருந்து நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்..

மேலும், நாட்டைச் சூழவுள்ள கடல் மற்றும் கரையோர சூழலை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் இந்த பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியும் எனவும் அதற்கான திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முகக்கவசங்கள் அணிவதை தவிர வேறு வழியே இல்லை

உலகம் முழுவதையும் கொரோனா தொற்று வாட்டி வதைத்ததை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது. ஏற்றுமதி, இறக்குமதி, தொழிற்றுறைகள், வருமானம் இழப்பு, பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தின. அதிலிருந்து பல நாடுகள், சில மாதங்களுக்கு மீண்டெழுந்துவிட்டன. எம்மைப்போன்ற நாடுகளுக்கு பெரும் சவாலாகவே கொவிட்-19 இருந்தது.

இந்நிலையில், கொரோனா வைரஸின் புதிய திரிபு கொஞ்சம், கொஞ்சமாக தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இதன் தாக்கம், இந்தியா, சிங்கப்பூரில் அதிகரித்துள்ளது. இதனையடுத்து விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ள உலக சுகாதார நிறுவனம், விழிப்புடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளது.

அந்த அறிவுறுத்தலைக் கவனத்தில் எடுக்காவிடின், எம்மைப்போன்ற நாடுகளும் மீண்டும் சிக்கிக்கொள்ளும். ஆகையால், சுகாதார அமைச்சு அறிவுறுத்தும் வரையிலும் காத்துக்கொண்டிருக்காது, முன்கூட்டிய பாதுகாப்பைச் செய்துகொள்ளவேண்டும். முகக்கவசங்களை அணிந்து சுயபாதுகாப்பை உறுதிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

முதலாவது கொவிட்-19 முழுவீச்சில் பரவத்தொடங்கியதை அடுத்து, முழுநாடும் இழுத்து மூடப்பட்டது.

இலங்கையில் முதலாவது முடக்கத்தின் போது, பல மாதங்களாக முழுநாடும் முடக்கப்பட்டிருந்தது. இரண்டாவது அலையின்போது, கொவிட்-19 நோயாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்கள் மட்டுமே முடக்கப்பட்டன. சில பகுதிகளில், ஓர் ஒழுங்கை அல்லது வீதி மட்டும் முடக்கப்பட்டது.

சுகாதார வழிகாட்டல்களில் பலவற்றை மக்கள் முறையாகக் கடைப்பிடித்தமையால், இரண்டாவது அலையில் சன நெரிசல் மிக்க ஒரு சில பிரதேசங்களைத் தவிர, ஏனைய இடங்களில் இறுக்கமான நிலைமையொன்று ஏற்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதியில் எவ்வாறான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றினோமோ, அதனையே மீண்டும் பின்பற்றவேண்டும்.

கிறிஸ்மஸ் உள்ளிட்ட புத்தாண்டுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற நிலையில், பிரதான நகரங்களுக்குக் கொள்வனவுக்காக மக்கள் படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர். பொது இடங்களில் சனநெரிசல் அதிகரித்துள்ளது. ஆகையால், சுயபாதுகாப்பை கடைப்பிடிப்பது கட்டாயமாகும். இல்லையேல் மீண்டும் முடக்கத்துக்குள் முடங்கி விழிபிதுங்கி நிற்கவேண்டிய நிலைமையே ஏற்படும்.

கொவிட்-19 வைரஸுக்கான தடுப்பூசிகளை 'நாங்கள்தான் ஏற்றிக்கொண்டுவிட்டோமே' என அசட்டையாகவும் இருந்துவிடக்கூடாது. ஏனெனில், அந்த தடுப்பூசிகள் ஏற்றிக்கொண்டதன் காலம், காலாவதியாகி இருக்கக்கூடும்.

இந்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி 2020.03.28 அன்றைய தினமே முதலாவது மரணம் பதிவானது என்பதையும் நினைவுறுத்துகின்றோம். அதற்குப் பின்னர் மரணித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். 2023.12.20ஆம் திகதி புள்ளிவிபரத்தின் பிரகாரம், 672,659 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதில், 16,888 பேர் மரணித்துவிட்டனர். 655,741 பேர் கொரோனாவில் இருந்து மீட்கப்பட்டனர்.

ஆகையால், சுகாதார வழிகாட்டல்களைத் துரிதமாக அறிவிப்பதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களிடத்தில் அக்கறையீனமும் அதிசிரத்தையும் ஏற்படுவது ஆரோக்கியமானதல்ல என்பதை நினைவூட்டிக்கொண்டு, கடந்த காலங்களில் மிகக் கடுமையாகப் பின்பற்றிய சுயசுகாதார வழிமுறைகளைக் காலந்தாழ்த்தாது அச்சொட்டாகப் பின்பற்றுவதே சிறந்தது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# நீறுபூத்த நெருப்பான தேசிய நிலைப்பாடு

அதிகளவு சிங்கள உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை ஒற்றை ஆட்சி பாராளுமன்றத்தில் ஈழத்தமிழர் தேசியச் சிக்கலுக்குரிய தீர்வை முன்வைக்க முடியாது என்பதாலேயே 'ஈழத்தமிழர் தேசியம்' என்ற கோட்பாடு எழுந்தது. சிங்களவர் ஈழத்தமிழர் ஆகிய இரு அரசியல் சமூகங்களும் தேசங்களாக ஒற்றையாட்சி பாராளுமன்றத்திற்கு வெளியே கூட்டாக நின்று நிர்வாக அதிகாரத்தை அல்ல ஆட்சி அதிகாரத்தைப் பங்கிடுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை எட்ட முடியும்.

இதற்கான கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித்தனியாகச் செயற்பட்டு ஒற்றையாட்சி பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் வியூகங்களுடன் மாத்திரம் இயங்கி வருவதால் மிகவும் பலவீனமான நிலைமை அதலபாதாளமாக வெளித் தோற்றத்துக்குத் தெரிகிறது.

ஆனால், மக்கள் மட்டத்தில் நீறுபூத்த நெருப்பாகத் தேசிய நிலைப்பாடு வேரூன்றியுள்ளது.இந்தச் சூழலில் புலம்பெயர் அமைப்புகளின் கூட்டு என்று தவறாகக் கூறிக் கொள்ளும் சில தனிநபர்களின் கூட்டு ஒன்று வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு இயங்கும் தன்னார்வ சக்திகளால் தயார்ப்படுத்தப்பட்டு மக்கள் மயப்பட்ட தேசிய நிலைப்பாட்டை நிலைமாறச் செய்யும் கைங்கரியத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதுவே உலகத் தமிழர் பேரவை.

யதார்த்த அரசியல்' என்று பேசுவோரும் 'முற்போக்குத் தமிழர்' மற்றும் 'மிதவாத அரசியல் தலைவர்கள்' என்று மார் தட்டுவோரும் 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் மிதமிஞ்சியுள்ள தன்மையைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நுட்பமாக மறுதலிக்கவும், 'இன நல்லிணக்கம்' 'மத நல்லிணக்கம்' என்ற போர்வையில் மீண்டும் இணக்க அரசியற் பொறிக்குள் ஈழத்தமிழர் தேசிய அரசியலைத் தள்ளிவிடவும் வெளிப்பட்டுள்ளார்கள். இது ஒன்றும் புதிய போக்கு அல்ல. பழைய பொறிகளின் புதிய தொடர்ச்சியே.

2015 மைத்திரி-ரணில் அரசாங்கத்தில் ஆரம்பித்த இந்த 'நல்லிணக்கப் பொறி' கோட்டாபய ராஜபக்ஷ 2020இல் ஜனாதிபதியான பின்னர் வேறொரு வடிவை எடுத்தது. தமது திட்டங்களுக்கு ஒத்துழைக்க கோட்டபாய மறுத்தபோது ஆட்சி மாற்ற வேலைத்திட்டத்துக்கச் சிங்களத் தரப்புகள் தயார்ப்படுத்தப்பட்டன. அதற்குத் தமிழர்களுக்கான சர்வதேச நீதியும் அரசியல் தீர்வும் கிடப்பில் போடப்பட்டது.

போலித் தன்மையுள்ள நல்லிணக்கம் என்ற பொருத்தமற்ற கதைக்கும், சென்ற மாதம் போலியாக சித்திரிக்கப்பட்ட துவாரகாவின் பெயரில் வெளியான மாவீரர் நாள் அறிக்கைக்கும் ஒரே பின்புலம் இருப்பது வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ தெரியாது விட்டாலும் இவை இரண்டுக்கும் பின்னால் மறைமுகமான சக்திகள் பின்னணி என்பது பட்டவர்த்தனம்.

குறிப்பாக 2009இற்குப் பின்னரான சூழலில் மேற்குலகின் புவிசார் அரசியல் பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு அரசுகளுக்கும் அவற்றின் தூதரகங்களுக்கும் அப்பால், ஆனால் அதே நலன்களுக்கு ஏற்பச் செயற்படும் பிராந்திய, சர்வதேச மற்றும் உளவு மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் செயற்பாடுகள் ஊடாக விளைந்ததுதான் இந்த இமாலயப் பிரகடனம்.

சுரேன் சுரேந்திரன் என்பவரின் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை என்ற தனி மனிதர் குழு இந்தச் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கு இயைந்துள்ளது கண்கூடு.

சிறந்த இலங்கைக்கான சங்கபீடம் (Sangha for Better Sri Lanka) என்ற அமைப்பும் சுரேந்திரனின் திட்டத்துடன் இணைந்துள்ளது. 2015ஆம் ஆண்டில் அப்போதைய அமைச்சரான மறைந்த மங்கள சமரவீரவின் மறைமுக அனுசரணையுடன் இலங்கைக்கு வந்து சில பௌத்த துறவிகளுடன் சுகாதார வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட புலம்பெயர் ஈழத்தமிழர் தனி நபர் செயற்பாட்டாளர் குழுக்கள் அப்போதே தயார்ப்படுத்தப்பட்டிருந்தன.

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை தொடர்பான கோரிக்கைகளைத் தவிர்த்தல், இலங்கை அரச கட்டமைப்புக்குள் ஐக்கியம் என்ற பெயரில் ஒற்றையாட்சிக்குள்ளும் ஒத்துப்போதல் மற்றும் ஈழத்தமிழர் என்ற அடையாளத்தைக் கைவிட்டு இலங்கையர் என்ற அடையாளத்தைத் தழுவுதல் போன்றவற்குத் ஈழத்தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை இணங்க வைப்பது இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் உத்திகளில் ஒன்று. இதனை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளில், குறிப்பாக ஜேர்மனி, சுவிஸ்சர்லாந்து, ஒஸ்ரியா, ஸ்கண்டிநேவிய நாடுகளில் 2009ஆம் ஆண்டின் பின்னர் அவ்வப்போது கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டிருக்கின்றன.

இக்கூட்டங்களில் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பல தாயக அரசியற் தலைவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்ற பெயரில் இயங்குபவர்களும் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன், பிரித்தானியத் தமிழர் பேரவையின் தலைவர் ரவி குமார் (ரூட் ரவி) மற்றும் தாயக சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி குமாரவேல் குருபரன் உள்ளிட்டோர் இக் கூட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றனர்.

இவர்களில் ஒரு சாரார் மேற்கின் நலன்களுக்கு ஒத்துப்போய் தமிழர் நலன்களை ஆகுதியாக்கக் கூடியவர்கள் மறுசாரார் மேற்கின் நலன்களோடு ஒத்துப்போய் பேரம் பேசக் கூடியவர்கள். இரண்டு முனைகளுக்கும் மாறி மாறிப் பயணித்து தாம் யார் என்பதைத் தெளிவாகச் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டாதவர்களும் இவர்களுள் அடங்குவர். ஆகவே, எவர் எவர் எப்படிப்பட்டவர் என்ற விவாதம் இங்கு அவசியமற்றது. என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாக விளங்கிக்கொள்வதே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அவசியமானது.

2009ஆம் ஆண்டின் பின்னர் நடந்த இக்கூட்டங்கள் வெவ்வேறாகவும், கூட்டாகவும் தனித் தனியாகவும் மிக இரகசியமான முறையில் மேற்கு நாடுகளின் நகரங்களில் விமானப் பயண மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கி நடத்தப்பட்டன. இக் கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்கள் எந்த ஒரு ஊடகங்களிலும் நேரடியாக வெளிவராது. ஏனெனில், அவ்வாறு எழுதப்படக்கூடாது என்பது அக்கூட்டத்தை நடத்திய தன்னார்வ நிறுவனங்களின் ஏற்பாட்டாளர்களால் நிலைப்பாடாக இருந்தது. எங்கே ஒளிவு மறைவாக இருக்க வேண்டும் எங்கே வெளிப்படைத் தன்மை பற்றிப் பேச வேண்டும் என்பதை ஏற்பாட்டாளர்களே கையாளுவர்.

ஆனாலும், கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்களை இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் ஏற்பாட்டாளர்கள் ஒரு விடயத்தில் குறியாக இருப்பர். பேசி உடன்பட்டவற்றை, அல்லது உடன்படாதவற்றைக் கூட ஏதோ ஒரு வகையில் ஒரு அறிக்கையாகத் தொகுத்துக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரின் ஒப்புதலைப் பெற்றது போல ஆவணப்படுத்திக் கொள்வர்.

இருந்தபோதும், இக் கூட்டங்களில் நடந்த பல விடயங்கள் வெளியே அரசல் புரசலாக அவ்வப்போது கசிந்திருக்கின்றன. இக் கூட்டங்களில் கலந்துகொண்ட சுரேன் சுரேந்திரன் போன்ற சிலரைத் தவிர்ந்த ஏனைய ஈழத்தமிழர் பிரதிநிதிகளுள் பலர் ஈழத்தமிழர்களின் அரசியல் பயணம் தொடர்பான பிரதான காரண-காரியங்களை விட்டுக்கொடுக்காமல் வலியுறுத்தியும் வந்துள்ளார்கள்.

ஆனாலும், 'உங்கள் இலக்கு' அதாவது சுயநிர்ணய உரிமையின் அப்பாற்பட்ட அரசியற் தீர்வு என்ற இலக்கை அடைவதற்குக் கூட்டத்தில் தங்களால் முன்மொழியப்பட்ட விடயங்களை ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் பின்னர் பையப்பைய உங்கள் இலக்கை அடைய முடியும் எனவும் இந்தத் தன்னார்வ நிறுவனங்கள் தமது போதனைகளாக அவ்வப்போது அறிவுறுத்தி வந்துள்ளன.

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்பைச் சர்வதேச விசாரணைக்கு உள்ளாக்கவேண்டும் என்ற கோரிக்கையை நழுவவிடுதல், இலங்கையர் என்ற அடையாளத்தை ஒப்புக்கொள்ளுதல் என்ற பிரதான நோக்கங்களை சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் ஆகிய சிலரைத் தவிர ஏனையோர் ஏற்க மறுத்திருந்தனர்.

இதன் காரணமாக இத் தன்னார்வ நிறுவனங்களின் இத்தகைய செயற்பாடுகள் பிசுபிசுத்துப் போயிருந்தன.

2009இற்கு முன்னர் அல்லது 2009இல் உருவாகி உலகம் முழுவதிலும் மக்கள் ஆதரவோடு செயற்பட்டு வந்த பதினான்கு புலம்பெயர் அமைப்புகளை இணைத்து கூட்டாக உலகத் தமிழர் பேரவை 2009இல் உருவாக்கப்பட்டது.

அந்தக் கூட்டின் முதல் தலைவராக இலங்கையில் கடந்த காலத்தில் ஒலிம்பிக் வீரராக புகழ்பெற்று பின்னர் அமெரிக்காவில் வதிந்துவரும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்பவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவரின் நண்பர்கள் பலரும் இவரை 'எதிர்' என்று அழைப்பர்.

இவர் ரவி குமாருடைய நெருங்கிய நண்பராகவும் பல காலத் தொடர்புடையவர் என்று இவர்கள் இருவரையும் நன்கு அறிந்த பிரித்தானிய வட்டாரங்கள் கூறுகின்றன.

2010இல் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியபோது, தமிழர்கள் சார்பான பொது வேட்பாளராக எதிரைப் போட்டியிடுமாறு அமெரிக்கத் தரப்புகள் அறிவுரை வழங்கியிருந்தன.

இது அப்போதிருந்த உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பின் அங்கத்துவ அமைப்புகள் பலவற்றுக்கும் கேள்வியை எழுப்பியது.

இலங்கையின் கட்சி அரசியலுக்குள் செல்லுமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி உள்ளிட்ட தமிழர் தரப்புக் கட்சிகளை எதிர்வீரசிங்கம் நாடியிருந்தார். ஆனால் கஜேந்திரகுமார் போன்றோர் அதை நுட்பமாக மறுத்துவிட்டனர்.



## வாழ்வியல் தரிசனம்

பெண்கள் கட்டாயமாகத் தற்பாதுகாப்புக் கலைகளைக் கற்றேயாக வேண்டும். பண்டைக் காலத்திலிருந்தே, நமது வீரப் பெண்மணிகள் எதிரிகளுடன் போராடும் வித்தைகளைக் கற்றிருந்தனர். வாள் வீச்சு, சிலம்பம், குதிரையேற்றம் போன்ற போரியல் பயிற்சிகளை, ஆண்களுக்கு நிகராகக் கற்றுக் கொண்டனர். இதனால் அவர்களின் இரத்தத்தில், வீரம் செறிந்திருந்தது.

இன்று, பெண்களை மதிக்காது அவமானப்படுத்தும் கயவர்கள் கூட்டம் அதிகமாகி விட்டார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதனால், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளைப் பெண்கள் எதிர்கொண்டே ஆகவேண்டும். பெண்கள் தமக்கான அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் போராட வேண்டும். தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொண்டால், எவருக்கும், எந்நேரத்திலும் பயப்படத் தேவையில்லை.

ஆண், பெண் பேதமின்றி, தற்பாதுகாப்புக் கலைகளை அனைவரும் கற்றுக்கொண்டால், மனவுறுதி, வீரம், தேகபலம் எல்லாமே இணைந்து விடுகின்றன. பெண்கள் சளைத்தவர்கள் அல்ல; எதிர்கொள்பவர்கள்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# டங்களுக்கு வந்து பாருங்கள்

110 குடும்பங்கள் வாழ்ந்து வரும், மஸ்கெலியா, டங்கள் தோட்ட மேற் பிரிவுக்குச் செல்லும் பிரதான வீதி பல தசாப்தங்களாக செப்பனிடபடாமையால் அத்தோட்டத்தில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள், நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுவதாக அத்தோட்டத்தில் உள்ளவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இத்தோட்டத்தில், 1990 காலப் பகுதியில் தரம் ஒன்று முதல் ஐந்து வரை பாடசாலை இயங்கி வந்தது. அதன் பின்னர் அப்பாடசாலை கீழ் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதனால், மேற்பிரிவு மாணவர்கள் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாகிவருகின்றனர்.

பாடசாலைக்கு சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, நடந்தே திரும்பவேண்டும். அதில், சுமார் 3 கிலோமீட்டர் தூரம் படுமோசமான நிலையில் உள்ளது.

மேலும், அத்தோட்டத்தில் 110 குடும்பங்களைச் சார்ந்த 400க்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தினர்கள் உள்ளனர் எனவும் இவர்களில் பாடசாலை மாணவர்கள் 100க்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். உயர்கல்வி பயிலுவதற்கு வெளியிடங்களுக்கே செல்லவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

செ.தி.பெருமாள்

# ‘ஆடுகளும் ஓநாய்களும்’

## கவிதை நூல் வெளியீட்டு விழா





திருகோணமலை–நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் நீங்களும் எழுதலாம் எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தின் “ஆடுகளும் ஓநாய்களும்” கவிதை நூல் வெளியீட்டு விழா கவிஞர் க.யோகானந்தன் தலைமையில் சனிக்கிழமை (09) நடைபெற்றது.

முதன்மை அழைப்பாளர்களாக சாகித்யரத்னா மு.சிவலிங்கம், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் ஏ.எப்.எம்.அஷ்ரஃப், கலந்து சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம், ஓய்வுபெற்ற உப–பீடாதிபதி ந.பார்த்தீபன் கலந்து கொண்டு சிறப்பிக்க, நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம்.நியாஸ், ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒ.குலேந்திரன், “ஓசை” சஞ்சிகை ஆசிரியர் மூதூர் முகைதீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையை ஊடகவியலாளர் அ.அச்சுதன் நிகழ்த்த, நூல் அறிமுக உரையினை சௌ.சந்திரகலா வழங்கி வைத்தார். முதல் பிரதியை மூத்த எழுத்தாளர் சூசைஎட்வேட், நூல் ஆசிரியரிடம் இருந்து பெற்றுக் கொண்டார். நூலின் நயவுரையை கவிஞர்.லலிதகோபன் வழங்கினார்.

விமர்சன உரையினை முதன்மை விருந்தினர் பேராசிரியர் ஏ.எப்.எம்.அஷ்ரஃப் வழங்கினார். நாடறிந்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா.மு.சிவலிங்கம் முதன்மை அழைப்பாளர் உரையை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர். ந.பார்த்தீபன் சிறப்பு விருந்தினர் உரை வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் வழங்கினார். நிகழ்ச்சித் தொகுப்பினை அதிபர் சுஜந்தினி வழங்கினார்.

■ அ . அச்சுதன்




# ‘சிதறல்கள் 100’

## கவிதை நூல் வெளியீட்டு


உரும்பையூர் து.திலக் எழுதிய “சிதறல்கள் 100” கவிதை நூல் வெளியீட்டு விழா, யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மண்டபத்தில் சனிக்கிழமை ( 16) நடைபெற்றது.


■ கனக தீபகாந்தன்

சிங்கள– தமிழ் இலக்கிய உறவினை பேணும்

# உறவுப்பாலம் மலரன்பன்

கொலுஷா வெளியீட்டு உரையில் எச்.எச். விக்கிரமசிங்க





“மலையக நாட்டைச் சேர்ந்த மாத்தளை மூதூர் வாழும்
தலையகப் பிறையி னார்தஞ் சக்தியாம் முத்து மாரிக்
குலமகள் தனக்கோ ரின்பக் குறவஞ்சி தமிழிற்பாட
மலைமகள் தனக்கு மூத்த மகன்கரி முகவன் காப்பே”

என்று மாத்தளையில் வாழ்ந்த நவாலியூர் சு.சொக்கநாதன் அவர்கள் இயற்றிய “மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி” (1993) என்ற கவிதை நூலை அமரர் கலைஒளி முத்தையா பிள்ளை நினைவாக மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் அமரர் த. மாரிமுத்து செட்டியார் முன்னிலையில் வெளியிட்டு, இன்று முப்பது ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. குறவஞ்சியை வாசித்த மாத்தளை வாசகர்கள் கவிஞர் வி.கந்தவனம் அவர்களின் ‘ஏனிந்தப் பெருமூச்சு’, முக்கவிஞர் வெளியீடான ‘சிட்டுக்குருவி’ போன்ற கவிதை நூல்களைத் தேடி வாசித்தது என் நினைவிற்கு வருகின்றது என எச்.எச். விக்கிரமசிங்க தெரிவித்தார்.

1960களின் முற்பகுதியில் கவிஞர் வி.கந்தவனம், கவிஞர் நவாலியூர் சொக்கநாதன், கவிஞர் ஈழவாணன் மாத்தளையில் வாழ்ந்த காலம் மலையக இலக்கியத்தின் பொற்காலமாகும். மாத்தளை புனித தோமையார் கல்லூரியில் பணியாற்ற வந்துசேர்ந்த கவிஞர் வி.கந்தவனம், மலையகத்தில் முதன்முதலாக மாத்தளையில் க.பொ.த. உயர்தர வகுப்பினை ஆரம்பித்து, முதற் தடவையாக மாத்தளையில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுப்பியமைக் குறிப்பிடத்தகும்.

இவ்வாண்டில் கலைஒளி முத்தையா பிள்ளை அவர்களின் புதல்வர் மு. நித்தியானந்தனின் ‘பெருநதியின் பேரோசை’ (2023) என்ற நூலை நாம் வெளியிட்டோம். மாத்தளை பெ.வடிவேலனின் ‘வல்லமை தாராயோ?’ என்ற சிறுகதைத் தொகுப்பும் கலைஒளி முத்தையா பிள்ளை ஞாபகார்த்தக் குழுவின் வெளியீடேயாகும். எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கல்லூரித் தாளாளர் குமார் ராஜேந்திரன் அவர்களின் ‘தாய்’ வெளியீட்டின் ஒரு லட்சம் ரூபாய் பரிசைப் பெற்று அந்நூல் பெரும் பாராட்டைப் பெற்றது.

அந்த வரிசையில் நோர்த் மாத்தளையில் பிறந்து அங்கேயே வாழ்ந்து வரும் மலரன்பனின் மொழிபெயர்ப்புச் சிறுகதைகளை ‘கொலுஷா’ என்ற தலைப்பில், அவரது 80வது பிறந்ததினப் பரிசாக இது இவ்வாண்டு வெளியிடுகிறோம். ‘கொலுஷா’ ரஷ்யாவின் எழுத்துலக மேதை மெக்சிம் கோர்க்கியின் சிறுகதையின் தலைப்பாகும். உலகச் சிறுகதைகளையும் சிங்களச் சிறுகதைகளையும் தாங்கி, பதினான்கு கதைகளைக் கொண்ட இந்த நூல் சிங்கள மொழியிலிருந்து தமிழில் மலரன்பனால் மொழிபெயர்க்கப்பட்டது என்பது சிறப்புக்குரியதாகும்.

# ‘செல்லச் சிட்டுக்கள்’





## பாடல்கள் நூல் வெளியீடு

கிண்ணியா சபீனா எழுதிய “செல்லச் சிட்டுக்கள்” சிறுவர் பாடல்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு கிண்ணியா நூல்நிலைய கேட்போர் கூடத்தில் எம்.என்.முஹம்மட் சமீம் தலைமையில் சனிக்கிழமை (16) இடம்பெற்றது.

நிகழ்வின் முதன்மை அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கலந்து சிறப்பித்தார்.

■ அ . அச்சுதன்



# அப்பா வருவாரோ?



சி.கஜானா
குருஃநிகஃஅல்ஃஇல்மியா மகா வித்தியாலயம் (ஆசிரியர்).



அந்த அர்த்தசாமப் பொழுதில் புதுக்குடியிருப்புக் கிராமம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. அமலாவின் கண்கள் மட்டும் தூங்க மறுத்தன. மனம் சஞ்சலப்பட அவள் அமர்ந்திருந்தாள். அவளருகே அவளது செல்ல மகன் கதிர் நித்திரையில் ஆழ்ந்திருந்தான். நாளை நடைபெறவுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கதிருக்கும் கலந்துகொள்ள அழைப்பு வந்திருக்கின்றது. நாளையும் விடிந்தவுடன் அவன் வழமை போல் ‘அப்பா எங்கே...? அப்பா எப்ப வருவார்?... என்ற கேள்விகளைக் கேட்பான். அமலாவும் வழைமை போல் பதிலைக் கூறத் திண்டாடுவாள். இவ்வாறு தனது இயலாத தன்மையை எண்ணித் தவித்தக் கொண்ட அமலாவின் மனதில் கடந்தகால நினைவலைகள் அலைமோதத் தொடங்கின.

சேகர் - அமலா திருமணம் பெற்றோர், பெரியோர் ஆசியுடன் இனிதே நடந்தேறியது. அன்பும் ஒற்றுமையும் துலங்க வாழத் தொடங்கிய அவர்களின் வாழ்க்கையில் குழந்தை இல்லை எனும் குறைதான் பல வருடங்களாக அவளை வாட்டியது. கோயில் குளம் சென்று தமக்குக் குழந்தை பிறக்க வேண்டுமென்று வழிபட்டார்கள். ஆண்டவன் திருவருளால் திருமணமாகி ஏழு வருடங்களின் பின்னர் அமலா கர்ப்பமானாள். இதனால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்த சேகர். அன்று முதல் அமலாவை அக்கறையோடு பார்த்துக் கொண்டான். அவள் விரும்பியவற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்தான். தனது இறைவழிபாட்டின் பிரதிபலன் இதுவென்று இவரும் இறைவனுக்கு நன்றி கூறினர்.

யுத்தமேகம் வன்னிப் பெருநிலப்பரப்பைச் சூழ்ந்துகொண்ட காலப்பகுதி அது. தமது உயிருக்குப் பயந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். சேகரும் மக்களோடு மக்களாக முள்ளிவாய்க்காலில் குடிசை அமைத்துத் தங்கினார். நிறைமாதக் கற்பிணியான அமலாவைப் பாதுகாத்துவிட வேண்டும் என்பதில் சேகர் கவனம் செலுத்தினான்.

உணவுப் பஞ்சம் தலை விரித்தாடியது. மக்கள் ஒரு நேர உணவுக்கும் படாதபாடுபட்டனர். குழந்தைகள் பசிக் கொடுமையால் வாடினர். பெற்றோர், பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாமல் திண்டாடினர். அமலாவின் பசிபோக்க எண்ணிய சேகர் யாதாயினும் உணவுப்பொருள் கிடைக்காதா? என்று தேடிச்சென்றான். போகும் போது, ‘அமலா கவனமாக இருந்துகொள்!... ஏதாவது சாப்பிடத் தேடிக் கொண்டு வாறன். கவனம்....’ எனக் கண்கள் கலங்க விடை பெற்றான் சேகர்.

‘ஓம்... நீங்களும் கவனமாய் போய் வாருங்கோ...’ என வழியனுப்பி வைத்தாள் விமலா.

இறுதியாக விடைபெற்றுக் கொள்கின்றோம் என்பதை அப்போது அந்த இரு அன்புள்ளங்களும் நினைத்திருக்க நியாயமில்லை. சேகர் சென்று சற்று நேரமளவில் பல இடங்களில் வெடிகுண்டுகள் வந்து வீழ்ந்து வெடித்துச் சிதறின. எங்கும் புகைமண்டலம், அவலக் குரல், ஐயோ... அம்மா... ஆ... என்னும் கூக்குரல் அமலாவிற்குப் பயம் தொற்றிக் கொண்டது. வெளியே சென்ற தனது கணவனுக்கு என்ன நடக்குமோ? என ஏங்கினாள். ‘கடவுளே என்ரை புருசனைக் காப்பாற்றிக்கொடு...’ எனத் தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். திடீரென ஒரு வெடிகுண்டு அமலா அமர்ந்திருந்த குடிசைக்கு அருகில் வீழ்ந்து வெடித்தச் சிதறியது. குண்டுச் சிதறல்கள். அமலாவின் உடலைத் தாக்கவே, இரத்தம் பீறிட, ‘ஐயோ... அம்மா...’ என அலறியபடி மண்ணில் சாய்ந்தாள் அவள்.

அமலா மயக்கம் தெளிந்து கண்களை மெல்லத் திறந்தாள். வேறு ஒரு உலகத்தில் இருக்கிறோமே என எண்ணத் தோன்றியது அவளுக்கு. முள்ளியவாய்க்காலில் வாழ்ந்த சூழலை விட முற்றிலும் மாறுபட்ட இடத்தில், தான் படுத்திருப்பதைச் சற்று நேரத்திற்கெல்லாம் அவளால் உணர முடிந்தது. ஆம், அது வைத்தியசாலை! காயப்பட்டவர்கள் பலரும் படுத்திருந்தனர். ‘ஆ... ஐயோ... அம்மா...’ அவள் அப்போதுதான் வேதனையை உணர்ந்தாள். அவளது உடலின் பல இடங்களில் காயங்களுக்கு மருந்து கட்டப்பட்டிருந்தது.

‘...ஐயோ... அம்மா... நான்... எங்கை... இருக்கிறன்?... என்ரை... சேகர்... எங்கை...?

என அமலாவின் குரல் கேட்டு அங்கே நின்ற மருத்துவத்தாதி ஒருத்தி அமலா அருகே வந்தாள்.

‘அக்கா... நான்... எங்கை... இருக்கிறன்? இது... எந்த இடம்?... என்ரை... சேகர்... எங்கே?...

அமலா மனம் வெலவெலத்துப் போய்க் கேட்டாள்.’

‘இது புல்மோட்டைக் கொஸ்பிற்றல்... முள்ளிவாய்க்காலில காயப்பட்டவளை இஞ்சைதான் கொண்டு வந்திருக்கினம். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை. இஞ்சை எல்லா வசதிகளும் செய்து தருவினம். உங்கடை பெயர் விபரம் பதிய வேணும்... ம்...’ கூறிவிட்டு தாதி சென்று விட்டாள்.

அமலா சுற்று முற்றும் பார்த்தாள். தனது கணவனையோ, உறவினர்களையோ காணவில்லை.

‘ஆண்டவா... என்ரை சேகரக்கு... என்ன ஆச்சுதோ தெரியேல்லையே... கடவுளே... நீதான் அவரை என்னட்டைக் கொண்டு வந்து சேர்க்கோணும்...’

உடற்காயங்கள் ஒரு புறமும், கணவனையும் சொந்தங்களையும் காணாத கவலை மறுபுறமும், வலியை ஏற்படுத்த, அமலா தேம்பித் தேம்பி அழுதாள்.

அன்றிரவு அமலாவிற்கு பிரசவவலி ஏற்பட்டது. உடனடியாக அவள் பிரசவ வாட்டிற்கு மாற்றப்பட்டாள். இரவு முழுவதும் மனவேதனையும், உடலில் காயங்களால் ஏற்பட்ட வலியும், பிரசவ வலியும் அமலாவை ஆட்டிப் படைத்திருக்க, மறுநாள் விடியற்காலையில் அழகான ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். மயக்கமுற்ற அமலா கண் விழித்ததும் மருத்துவ தாதியர் குழந்தையை அவளிடம் காண்பித்தனர். தனக்கு ஆண் குழந்தை பிறந்ததை அறிந்தது அமலா ஆனந்தமடைந்தாள்.

‘ஆ... என்ரை சேகர் இருந்தால் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பார்...’ அமலா விம்மி விம்மி அழுதாள். தாதியரும் அருகிலிருந்தவர்களும் அவளுக்கு ஆறுதல் கூறினர்.

ஒரு மாதத்தின் பின்னர் அங்கிருந்த மக்களுடன் அமலாவும் குழந்தையும் செட்டிகுளம் நலன்புரி முகாமிற்கு அனுப்பப்பட்டனர். அங்கு அமலா தனது பிள்ளையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற மனத்திடத்துடன் குழந்தைக்கு கதிர் எனப் பெயரிட்டு வளர்த்தாள். சேகருக்கு என்ன நடந்திருக்கும் என்பதை அறியாத அமலா, அறிந்தவர் தெரிந்தவர்களிடம் கணவனைப் பற்றி விசாரித்தாள். பலன் எதுவுமில்லை. வேறு நலன்புரி முகாமிலிருந்து அமலா தங்கியிருந்த முகாமிற்குப் பலர், உறவினர் இணைப்பில் வந்தனர். அவ்வாறு ‘சேகரும் ஒருநாள் வந்துவிடுவார்.’ என அமலா அவ்வப்போது தனது மனதைத் தேற்றிக் கொள்வாள்.

காலச்சக்கரம் சுழன்றோட வன்னியில் மீள்குடியேற்றம் நிகழ்ந்தது. அமலா தனது செல்லக்குழந்தை கதிருடன், சொந்த ஊருக்கு வந்தாள். யுத்த வடுக்களில் நடுவே மனவடுக்களையும் சுமந்தவளாய் அமலா தனது காணியில் காலடி எடுத்து வைத்தாள். அவ்வேளையில் சேகர் பற்றிய நினைவு வரவே சற்றுநேரம் அழுது தீர்த்தாள்.

குடிசை தற்காலிகவீடு அரசவீட்டுத் திட்டம் ஒவ்வொன்றாய் வந்து சேர்ந்தன. சேகர் மட்டும் வரவேயில்லை.

அமெரிக்கா


# தகுதி இழந்தார் டிரம்ப்

கடந்த முறை நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதிக்கான போட்டியில் டொனால்ட் டிரம்ப் போட்டியிட்டார். ஏற்கெனவே ஜனாதிபதி பதவியில் இருந்து 2ஆவது முறையாக போட்டியிட்ட அவர், ஜோ பைடனிடம் தோல்வியடைந்தார்.

இருந்த போதிலும், டிரம்ப் தனது தோல்வியை ஏற்க மறுத்து வந்தார். அவரது ஆதரவாளர்களும் டொனால்ட் டிரம்ப் தோல்வியை ஏற்க மறுத்தனர். மேலும், அமெரிக்க பாராளுமன்றத்தில் நுழைந்து போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் டிரம்பிற்கு பங்கு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பாக அமெரிக்காவின் பல்வேறு மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வகையில், கொலராடோவில் உள்ள நீதிமன்றத்தில் வழக்க தொடரப்பட்டது.



இந்த வழக்கு விசாரணை முடிவில், டொனால்ட் டிரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேலும், குடியரசு கட்சி சார்பில் யார் வேட்பாளர் என்பதற்கான தேர்தல் நடைபெறும்போது, வாக்குச்சீட்டில் அவரது பெயர் இடம் பெறக்கூடாது. ஒருவேளை, பெயர் இடம் பெற்றாலும் அவருக்கு வாக்களித்திருந்தால் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது எனத் தெரிவித்தது.


இருந்தபோதிலும், ஜனாதிபதிக்கான முக்கியமான தேர்தலில் தடைவிதிக்கப்படவில்லை. இந்த தீர்ப்பை எதிர்த்துள்ள டொனால்டு தரப்பினர், மேன்முறையீடு செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.




## வெடித்து சிதறியது ஐஸ்லாந்து எரிமலை

ஐஸ்லாந்தின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை வெடித்து சிதற தொடங்கியுள்ளது. கிரின்டாவிக் நகரத்தில் இருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த எரிமலை, திங்கட்கிழமை (18) இரவு வெடிக்க தொடங்கி தீப்பிழம்பை கக்கி வருகிறது.

எரிமலை வெடிப்பு காரணமாக கிரின்டாவிக் பகுதியில் வசிக்கும் 4 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.



## வானில் தோன்றிய கிறிஸ்துமஸ் மரம்

பூமியில் இருந்து சுமார் 2,500 ஆண்டுகளுக்கு அப்பால் கிறிஸ்மஸ் மரம் போன்ற தோற்றத்தை நட்சத்திரக் கூட்டங்கள் உருவாக்கி உள்ளன. கிறிஸ்மஸ் மரம் போன்ற வடிவில் உள்ள நட்சத்திரக் கூட்டத்தை நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சந்திரா கண்காணிப்பகம் படம் பிடித்துள்ளது. நமது பால்வழி அண்டத்தில் சூரிய குடும்பத்துக்கு அடுத்தப்படியாக பச்சை நிறத்தில் இந்த விண்மீன் திரள்கள் காட்சியளித்தன. உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை கட்டியுள்ள நிலையில், வியப்பூட்டும் புகைப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது.

NGC 2264 என்று பெயரிடப்பட்டுள்ள புதிய விண்மின் திரள்களில் உள்ள நட்சத்திரங்களுக்கு ஒன்று முதல் 5 கோடி ஆண்டுகள் வரை வயது இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

சில பூமியை விட சிறியவை, மற்றவை சூரியனைவிட பெரியவை.

அவற்றின் எடை சூரியனின் எடையில் பத்தில் ஒரு பங்கிற்கு குறைவானதாகவும் ஒரு சில சூரியனின் எடையை விட ஏழு மடங்கு அதிகமாகவும் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை

## "ஆசிரியைகள் சுடிதார் அணியலாம்"

அரசு பாடசாலை ஆசிரியைகள் சுடிதார் அணிந்து வரலாம் என தமிழக பாடசாலை கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தி.மு.கவின் நீண்ட கால பொதுச்செயலாளரான மறைந்த அன்பழகன் நினைவாக அவரது பிறந்தநாளில் (டிசெம்பர் 19) கனவு விருது வழங்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்த நிலையில், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே இளையாம்பாளையத்தில் அமைந்துள்ள விவேகானந்தா மகளிர் பொறியியல் கல்லூரியில் நடந்த விழாவில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியதாவது, "கனவு ஆசிரியர் விருது பெறும் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

அரசு பாடசாலை என்பது வறுமையின் அடையாளம் இல்லை. அது நம் பெருமையின் அடையாளம் என்ற வகையில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். பாடசாலை கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியைகள் தங்களின் விருப்பப்படி விதிகளுக்கு உட்பட்டு புடவையோடு சுடிதாரும் அணிந்து வரலாம்" என தெரிவித்தார்.






## 141 எம்.பிக்கள் இடை நீக்கம்

பாராளுமன்றத்தில் நடப்பு குளிர்கால கூட்டத்தொடரில், கடந்த புதன்கிழமை (13) மக்களவையில் மதியம் நடந்த பூஜ்யநேர விவாதத்தின்போது, திடீரென பார்வையாளர்கள் வரிசையில் இருந்து சிலர் அவைக்குள் குதித்து வண்ணப்புகை குண்டுகளை வீசினர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இச்சம்பவத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. அவையில் அத்துமீறலில் ஈடுபட்டது பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுபற்றி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிக்கை அளிக்க கோரியும், இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதனை கண்டித்தும், எதிர்க்கட்சிகள் திங்கட்கிழமை (18) அமளியில் ஈடுபட்டன. இதனால், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிற்கு எச்சரிக்கை விடுத்து அமைதியாக இருக்கும்படி கேட்டு கொண்டார்.

எனினும், எதிர்க்கட்சிகளின் அமளியால், அவை தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட கூடிய நிலை ஏற்பட்டது. இதன்பின்னர் மதியம் 3 மணிக்கு பின்னர், தலைவர் ராஜேந்திர அகர்வால் தலைமையில் அவை கூடியபோது, மீண்டும் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தாக கூறி எம்.பி.க்கள் இடை நீக்கம் செய்யப்படுகின்றனர் என சபாநாயகர் அதிரடியாக உத்தரவிட்டார்.

பங்களாதேஷுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து




பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த நியூசிலாந்து, நெல்ஸனில் நடைபெற்ற இப்போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதிப்படுத்திக் கொண்டது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் டொம் லேதம், முதலில் களத்தடுப்பிலீடுபடத் தீர்மானித்தார். நியூசிலாந்து சார்பாக சுழற்பந்துவீச்சாளர் ஆதித்யா அஷோக்கும், பங்களாதேஷ் சார்பாக சுழற்பந்துவீச்சாளர் ரிஷாட் ஹொஸைனும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டனர்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சௌமியா சர்க்கார் 169 (151), முஷ்பிக்கூர் ரஹீம் 45 (57) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், வில்லியம் ஓ ரூர்கே மற்றும் ஜேக்கப் டஃபி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஜொஷ் கிளார்க்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 292 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, ஹென்றி நிக்கொல்ஸின் 95 (99), வில் யங்கின் 89 (94), றஷின் றவீந்திரவின் 45 (33), லேதமின் ஆட்டமிழக்காத 34 (32), டொம் பிளன்டெல்லின் ஆட்டமிழக்காத 24 (20) ஓட்டங்களோடு 46.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஷொரிஃபுல் இஸ்லாம் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக சர்க்கார் தெரிவானார்.

4ஆவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில்

## மேற்கிந்திய தீவுகளை வீழ்த்திய இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான நான்காவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், ட்ரினிடாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மே. தீவுகளின் அணித்தலைவர் றொவ்மன் பவல், இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பில் ஸோல்டின் 119 (57), அணித்தலைவர் ஜொஸ் பட்லரின் 55 (29), லியாம் லிவிங்ஸ்டோனின் ஆட்டமிழக்காத 54 (21), வில் ஜக்ஸின் 24 (09) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 268 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மே. தீவுகள், 15.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அன்ட்ரே ரஸல் 51 (25), நிக்கலஸ் பூரான் 39 (15), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் 36 (15) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஸோல்ட் தெரிவானார்.







## கோப்பா இத்தாலியா: வெளியேற்றப்பட்ட நாப்போலி

கோப்பா இத்தாலியா தொடரிலிருந்து நாப்போலி வெளியேற்றப்பட்டுள்ளது.

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான இத்தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற புறோசினினோயுடனான இறுதி 16 அணிகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து நாப்போலி வெளியேறியது.




## மலிங்கவுடன் இணையும் குட்டி மலிங்க

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பை இந்தியன்ஸ் அணியில் இலங்கையின் வேகப்பந்துவீச்சாளரான நுவான் துஷார விளையாடவுள்ளார்.

ஐ.பி.எல்லின் அடுத்தாண்டுத் தொடருக்கான ஏலத்தில் 4.8 கோடி இந்திய ரூபாய்களுக்கு மும்பையால் நேற்று முன்தினம் வாங்கப்பட்டமையையடுத்தே அவ்வணிக்காக துஷார விளையாடவுள்ளார்.

அந்தவகையில் மும்பையின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் லசித் மலிங்கவால் முதலில் அடையாளங்காணப்பட்ட 29 வயதான துஷார, அணியில் அவரின் கீழ் பயிற்சிகளைப் பெறவுள்ளார்.

இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இந்தியாவைத் தோற்கடித்த தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், போர்ட் எலிஸபெத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியா தோற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

இந்தியா: 211/10 (46.2 ஓவ.) (துடுப்பாட்டம்: சாய் சுதர்சன் லோகேஷ் ராகுல் 56 (64) ஓட்டங்கள். பந்துவீச்சு: நன்ட்ரே பேர்கர் 3/30, பெயுரன் ஹென்ட்றிக்ஸ் 2/34, கேஷவ் மஹராஜ் 2/51, ஏய்டன் மார்க்ரம் 1/28, லிஸார்ட் வில்லியம்ஸ் 1/49)

தென்னாபிரிக்கா: 215/2 (42.3 ஓவ.) துடுப்பாட்டம்: டொனி டி ஸொர்ஸி ஆ.இ 119 (122), றீஸா ஹென்ட்றிக்ஸ் 52 (81), றஸி வான் டர் டுஸன் 36 (51) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரிங்கு சிங், அர்ஷ்டீப் சிங் 1/28)

போட்டியின் நாயகன்: டொனி டி ஸொர்ஸி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 21, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.